5th November 1958]

MR. SPEAKER : தயவுசெய்து அங்கத்தினர், "இது ஒரு பிற்பட்ட துறைமுகம், இதைச் சீர்திருத்த முடியுமா" என்று கேள்வி கேட்டால் போதும். பழைய சரித்திரத்தை எல்லாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர், இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இப்பொழுது திட்டம் இருக்கிறதா என்று கேட்டதனால், இல்லை என்று பதில் சொன்னேன். "லாண்டிங் அண்டு ஷிப்பிங் கமிட்டி" என்று ஒன்று வைத்து, அங்கு ஏதாவது வசூல் செய்து இதை அபிவிருத்தி செய்ய முடியுமா என்று அரசாங்கம் யோசனை செய்து வருகிறது.

Cultivation of Tea and Coffee in the Javadu and Elagiri Hills

* 886 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

ஜவ்வாது மலை—எலகிரி மலையில் தேயிலை—காப்பி பயிர் செய்ய முடியுமா என்று சர்க்கார் ஆராய்ச்சி செய்து பார்த்தார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No serious attempts have so far been made by the Forest Department to grow coffee in the Javadu and Elagiri Hills departmentally. The elevation and rainfall are not adequate for growing tea in these places.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் அமைச்சர் அவர்கள் நான்கு மாதங்களுக்கு முன்பு இந்த சரித்திரப் பிரசித்திபெற்ற மலைகளுக்குச் சென்று பார்வையிட்டபொழுது, அங்கேயுள்ள போக்குவரத்து வசதிகளைச் செப்பனிடுவதன் மூலமாக காப்பி, தேயிலை போன்றவைகளைப் பயிரிட்டு பலவகை அபிவிருத்திகளைச் செய்ய முடியுமென்று அபிப்பிராயப் பட்டார்கள். அதற்கான நடவடிக்கைகள் விரைவிலே எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் அங்கே போனபொழுது, காப்பி, தேயிலை பயிர் செய்வதுபற்றி யாரிடமும் கலந்து பேசவில்லை. அதைப்பற்றி அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை. ஆனால் தேயிலை பயிரிடுவதற்கு அதிக மழை வேண்டும், அதிக உயரம் வேண்டும். இந்த இரண்டு வசதியும் இந்த மலைகளிலே இல்லை.

Stud Bulls

* 887 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) Whether stud bulls (supplied by the Government to the Co-operative Farms and individuals), which are born out of artificial insemination, are giving satisfactory services; and

(*b*) if not, whether artificial insemination is proposed to be given up?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Animal Husbandry Department has not supplied so far any co-operative farm with bulls born by Artificial Insemination. From experience it has been found that bulls born by artificial insemination serve as well as those born by natural service.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the Government have received any complaints regarding the unsatisfactory service done by stud bulls born of artificial insemination?